[30th October 1957

THE HON. SRI M. A. MANICKAVELU: இன்னும் இதில் எந்தெந்த திட்டம் என்று நிச்சயிக்கவில்லை. இவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து முடிவு செய்யப்படும்.

Sri N. K. Palaniswami rose.

MR. SPEAKER : The hon. Member may give notice of a separate question. We will now take up the next question, Question No. 36.

Strikes in textile mills

* 36 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of strikes that took place in textile mills during 1957;

(*b*) the number of conciliation conducted by Labour Officers; and

(*c*) the number of mill owners punished under section 29 of the Industrial Disputes Act during 1957?

THE HON. SRI R. VENKATARAMAN.—(*a*) 83.

(*b*) 58.

(*c*) Nil.

SRI N. K. PALANISAMI : ஏற்கெனவே போன வருஷம் புதுக்கோட்டை கணபதி மில் தகராறில் " அவார்ட் " வெளிவந்து ஒரு வருட காலமாகியும் அதை அங்குள்ள முதலாளிகள் அமுல் செய்யாமல் இருக்கிறார்கள். சமீபத்தில் குன்னூர் பனகல் டீ எஸ்டேட்டிலும் " அவார்ட் " வந்தும் இதுவரை முதலாளிகள் அமல் செய்யவில்லை. அது மாத்திரமல்ல. அங்கிருந்து நூற்றுக்கணக்கான தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கியும் வருகிறார்கள். ஆகவே இந்த நிலைமைகளை சீர்திருத்த ஏன் அந்த முதலாளிகளின்மீது சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று கேட்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : கணபதி மில் சம்பந்தமாக தனி கேள்வி போடவேண்டும். இன்னும் அந்த இடத்தில் வேலைநிறுத்தம், கதவடைப்பு முதலியவை நடந்துகொண்டிருப்பதாக தெரிகிறது. இந்த கேள்வி பஞ்சாலை தொழிற்சாலைகளைப்பற்றித்தான் கேட்கப்பட்டிருக்கின்றது. ஆகவே எஸ்டேட்டுகள் பற்றிய விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI S. PAKKIRISWAMI PILLAI : இந்த மாதிரியாக அடிக்கடி வேலை நிறுத்தங்கள் தமிழ் நாட்டில் அதிகமாக நடந்துகொண்டிருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். இதற்கு அடிப்படையான காரணம் என்ன ? இதற்கான அடிப்படையான காரணங்களை வைத்துக் கொண்டு இவைகளை தடுப்பதற்கு, அதாவது வேலை நிறுத்தங்களை இல்லாமல் ஆக்குவதற்கு சர்க்கார் ஏதாவது முயற்சிகள் எடுத்திருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அடிக்கடி பஞ்சாலை தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தங்கள் நடைபெறுகிறது என்று சொல்லுவது அவ்வளவு சரியல்ல. பிற மாகாணங்களிலுள்ள பஞ்சாலை தொழிற்சாலைகளையும் நமது ராஜ்யத்திலுள்ள தொழிற்சாலைகளையும் ஒப்பிட்டு பார்க்கும் போது நமது ராஜ்யத்தில் அதிகமாக தொழில் அமைதி நிலவி வருகிறது என்பதை தெரிவிக்க ஆசைப்படுகிறேன். முக்கியமாக இந்த பிரச்னையில்

30th October 1957]

தகராறு என்னவென்றல் வேலைப்பளு, கூலி நிர்ணயம் இவ்வித இரண்டு விஷயங்களில் தகராறு ஏற்படுகிறது. இவற்றையெல்லாம் முடிவு செய்வதற்கு பல கமிட்டிகள் போடப்பட்டிருக்கிறது. அதில் பல முடிவுகளும் செய்யப்பட்டு வருகிறது. இதற்கும் மேலாக பிரத்தியேகமாக வேறு எந்த நடவடிக்கையும் வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன்.

Sri N. K. PALANISAMI : ஸார், லேபர் ஆபீஸர்களால் எத்தனை தகராறுகள் கன்ஸிலியேஷனுக்கு விடப்பட்டன ? எத்தனை கேஸ்கள் அட்ஜுடிகேஷனுக்கு விடப்பட்டன ?

The Hon. Sri R. VENKATARAMAN : அவைகளை இப்போது சொல்ல முடியாது. ஆனல் இதில் என்ன கொள்கை கையாளப்படுகிறது என்றல் லேபர் ஆபீஸர்கள் செய்யக்கூடிய நியாயமான முடிவுகளை, முதலாளிகள் ஒத்துக்கொள்ளாவிட்டால் அட்ஜுடிகேஷனுக்கு விடப்படுகிறது. தொழிலாளர்கள் ஒத்துக்கொள்ளாவிட்டால் அட்ஜுடிகேஷனுக்கு விடுவதில்லை.

Sri N. K. PALANISAMI : இப்போது சமீபத்தில் தொழிலாளர்கள் தலைவர்கள் எல்லாம் கூடி, கட்டாய ஒப்பந்தங்களை அமுல் நடத்த அதாவது சர்க்கார் நேரடியாக நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லப்பட்டது. அவ்விதம் ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறதா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இண்டஸ்டிரி முழுவதையும் சார்ந்த தொழில் தகராறுகள் ஏற்பட்டால் சர்க்காரோ அல்லது லேபர் கமிஷணரோ அதை தீர்த்து வைக்க முயற்சிக்கின்றர்கள். இது தவிர அந்தந்த யூனிட்டுகளில் ஏற்படுவதை அங்கிருக்கக்கூடிய லேபர் ஆபீஸர்கள் மூலம்தான் தீர்த்துவைக்கப்படுகின்றது.

Concessions to Harijan Christian converts

* 37 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether all concessions other than educational concessions which are applicable to Harijans, are extended to Harijans converted to Christianity?

The Hon. Sri P. KAKKAN : Of the concessions applicable to Harijans other than educational concessions, only the following are extended to Harijans converted to Christianity :—

(1) Provision of house sites;

(2) provision of wells, tanks, etc., for the supply of drinking water;

(3) provision of sanitary amenities, pathways, street-lighting, burning or burial grounds;

(4) grants to private bodies engaged in social and economic uplift of the eligible communities; and

(5) assignment or lease of land for cultivation.

Sri N. K. PALANISAMI : ஸார், உத்தியோக விஷயங்களில் கிருஸ்துவ ஹரிஜனங்களுக்கும், ஹிந்து ஹரிஜனங்களுக்கும் வித்தியாசம் காட்டப்படுவது ஏன் ? இவ்வித வித்தியாசங்களை நீக்கி யாராய் இருந்தாலும்சரி, ஒரே மாதிரியாக உத்தியோகங்களை கொடுப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

The Hon. Sri P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்கள் இதற்கு தனி கேள்வி போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.